# The Demonstrative Pronoun 'Ikaram' and the Metrical Structure in the Divya Prabandham

**Dr. M. Durga**

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18981580

**Abstract**

*Words are classified as single-letter words, two-letter words, and words consisting of more than two letters. Sentence structure is formed using phrases such as subject phrases, predicate phrases, and case phrases. The predicate phrase is the main component of a sentence. The subject phrase and the object phrase function based on the predicate phrase In sentences such as complex and compound sentences, the structure is built with multiple phrases at various levels, including subject, predicate, and object. A complex sentence or compound sentence as some call it is constructed using multiple clauses depending on the context and meaning. Based on the sentence structure that emerges in prose, a syntactic theory has been developed for the language of Divya Prabandham.*

***Keywords:*** *Clause, Materiality, Prose, Non-contiguous Adjacent Element, Prosody, Adjective Phrase, Phoneme.*

**References**

1. Akaththiyalikam, S., tamilmozhi amaippiyal, Meyyappam Tamizhayvakam, 53, Puthuththeru, Chithamparam – 608 001.First edition : October – 2016.
2. Arankarasan Maruthur., Yapparinthu Pappunaiya, Ainthinaip pathippakam, 279, Bharathi Salai, thiruvallikkeni, Chennai – 600 005. Second Edition - 2018
3. Arankan, Ki., thodariyal: Marrilakkana Anukumurai, Tamil University, Thanjavur – 613 010. Reedition- 2014.
4. Sanmukam, se.vai., Ilakkiyamum Mozhiamaippum, 41-B, Sitko IntaStiriyal Estet, Ampaththur, Chennai – 600 098, Second Edition: April - 2012
5. Seyaraman, R., Thodarmoshi Ilakkana Adippataikal, Tamizhayvu Manram, 4\1083, Neru Nagar, Kottovakkam, Chennai – 600 096, Edition: 2013
6. Virapaththira Muthaliyar, thi., Viruththappaviyal, I.En.thanikasha Muthaliyar Pathippashiriyar Kazhakam, Chennai. First Edition – 1984.
7. Lipko Pathippu, Nalayira Divviya Pirapantham, Lipko Publication, No 36, North Street, East C.AI.Di.Nagar, Chennai – 600 035. Reedition - 2016

# திவ்வியப் பிரபந்தத்தில் இகரச் சுட்டு அடைத்தொடரும் யாப்பு கட்டமைப்பும்

*முனைவர் மு. துர்கா*

**முன்னுரை**

ஓரெழுத்து ஒரு மொழி, ஈரெழுத்து ஒரு மொழி, இரண்டுக்கும் மேற்பட்ட தொடர் மொழி எனச் சொல் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. வாக்கியக் கட்டமைப்பு எழுவாய்த் தொடர், பயனிலைத் தொடர், வேற்றுமைத் தொடர் எனத் தொடர்களை கொண்டு உருவாக்கப்படுகிறது. பயனிலைத் தொடரே ஒரு வாக்கியத்தின் தலைமைக் கூறாக உள்ளது. பயனிலைத் தொடரை அடிப்படையாகக் கொண்டே எழுவாய்த்தொடர், வேற்றுத்தொடர் ஆகியன இயங்குகின்றன. கலவை வாக்கியம், கூட்டு வாக்கியம் முதலான வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எனப் பல நிலைகளில் பல தொடர்களைக் கொண்டு கட்டமைக்கப்படுகிறது. கலவை வாக்கியம், கூட்டு வாக்கியம் சொல்வோரின் பொருள் சூழலுக்கு ஏற்பப் பல தொடர்களைக் கொண்டு உருவாக்கப்படுகிறது. அவ்வாறு உரைநடையில் உருவாகும் வாக்கிய அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு திவ்வியப் பிரபந்த மொழியில் தொடரியல் கோட்பாடானது உருவாக்கப்பட்டுள்ளது.

விளக்க மொழியியல், வரலாற்று மொழியியல், ஒப்புமை மொழியியல், அமைப்பு மொழியியல், மானிட மொழியியல், சமுதாய மொழியியல் என மொழியியல் பிரிவுகள் பல உள்ளன. இந்த மொழியியல் பிரிவுகள் பல நிலைகளில் தங்களுக்கான களன்களைக் கொண்டுள்ளன.

யாப்பு வடிவம், பொருள் என்ற இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு செய்யுள்கள் புனையப்படுகின்றன. அவ்வாறு செய்யுள்கள் புனையும்போது தொடர்கள் ஒரு கூறாக அமைகின்றன. அவ்வாறு அமைந்த தொடர்கள் பா, பாவினங்களுக்கு ஏற்ப இகரச் சுட்டு அடைத்தொடர் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை ஆய்வதே இந்த ஆய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

**இகரச்சுட்டு அடைத்தொடர்**

பெயர்கள் தங்களுக்கான பண்பினை அடையாக ஏற்று வருவது அடைத் தொடராகும். அவ்வாறு வரும் அடைத்தொடர் பல வகைகளில் உள்ளது. உரைநடையில் கூறும்போது பெயரடை, வினையடை என்ற இரண்டில் அடக்கி விடலாம். ஆயின் செய்யுள் கட்டமைப்பில் அடைகளை கூறும்போது வினை அடிப்படை அடைகள், பண்பு அடிப்படை அடைகள், இலக்கண அடிப்படை அடைகள் என்ற வகைமையில் உள்ளது.

பொருண்மைச் சூழலை மையமாக கொண்டே அடைத்தொடர் பயின்று வருகின்றது. பெயர்களின் பண்பினை அடிப்படையாக கொண்டு அடைகள் கூறும்போது ஓரடை, ஈரடை, மூவடை என அடைகள் அடுக்கி கூறப்படுகிறது. இவ்வாறு அடைகள் அடுக்கி கூறும்போது பெயருக்கு அடைக்கு இடையில் பயின்று வரும் பிற அடைகள் தொடராத அண்மை உறுப்பு அடிப்படையில் உள்ளது. எனவே இவ்வாறு அடைகளை அடுக்கி செய்யுளில் கூறுவதற்கு முக்கிய காரணமாக இருப்பது அசை, சீர்களாகும். யாப்பு கட்டமைப்பில் இகரச்சுட்டு அடைத்தொடரின் முக்கிய பங்கினை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக உள்ளது.

***ஒலியனும் அடையும்***

***அடையும் தொடையும்***

***இகர சுட்டினை முடிக்கும் சொல்லாக உள்ள பெயரின் அடிப்படையில் எதுகைக்கான வாய்ப்பு அமைந்துள்ளது.***

***எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்***

***மைந்நம்பு வேல்கண்நல் லாள்முன்னம் பெற்ற வளைவண்ண நன்மா***
***மேனி***
***தன்நம்பி நம்பியு மிங்கு வளர்ந்தது அவனி வைசெய் தறியான்***
***பொய்ந்நம்பி புள்ளுவன் கள்வம் பொதியறை போகின்ற வாதவழ்ந் திட்டு***
***இந்நம்பி நம்பியா ஆய்ச்சியர்க் குய்வில்லை என்செய்கேன் என்செய்***
***கேனோ (தி.பி.1911)***

இச்செய்யுளில் ந்நம்ப், ன்நம்ப், ய்ந்நம்ப் என்ற எழுத்துக்கள் அடிப்படையில் எதுகை அமைந்துள்ளது. மைந்நம்பு வேல்கண் என்ற உவமை அடைத் தொடர், தன்நம்பி என்ற தன்மை பெயரடைத்தொடர், பொய்ந்நம்பி என்ற பெயரடைத்தொடர், இந்நம்பி என்ற சுட்டு அடைத் தொடர் அடிப்படையில் எதுகைக்கான சூழல் அமைந்துள்ளது. எதுகைக்கான தொடர்கள் அனைத்தும் மூவசை வாய்பாட்டில் அமைந்துள்ளன. ஆய்ச்சியர் கண்ணனிடம் இருந்து உய்வதற்கு வழியில்லை என்ன செய்வது என யசோதையிடம் முறையிடுவது பாடலின் மையப்பொருளாக உள்ளது. அவ்வாறு முறையிடும்போது இறைவனின் சிறப்பைக் கூறும்போது இந்நம்பி என்ற சுட்டு அடைத் தொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**ஒரூஉ மோனை**

முதல் மற்றும் நான்காம் சீரின் முதல் எழுத்து ஒன்ற தொடுப்பது ஒரூஉ மோனையாகும்.

***அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்***

***இதுவென் புகுந்ததிங் கந்தோ இப்பொய்கைக் கெவ்வாறு வந்தாய்***
***மதுவின் துழாய்முடி மாலே மாயனே எங்க ளமுதே***
***விதியின்மை யாலது மாட்டோம் வித்தகப் பிள்ளாய் விரையேல்***
***குதிகொண் டரவில் நடித்தாய் குருந்திடைக் கூறை பணியாய் (தி.பி.525)***

இச்செய்யுளில் இது - இப்பொய்கை, மது - மாயனே, விதி - வித்தக, குதி - கருத்து என்ற சொற்களின் அடிப்படையில் ஒரூஉ மோனை அமைந்துள்ளது. மூன்று மற்றும் ஆறாம் சீர்கள் மட்டுமே மாச்சீராக வந்துள்ளன. நான்காம் சீர்கள் முதல் அடியில் காய்ச்சீர் பிற அடியில் எல்லாம் விளச்சீராக உள்ளன. விளச்சீர் வருமிடத்தில் காய் வரலாம் என்பது பொது விதியாக விருத்தப்பாவில் கூறப்பட்டுள்ளது. பிற சீர்கள் மா, விளம், காய் என விரவி ஒழுக்குமுறையின்றி உள்ளன. எனவே காயச்சீர் மற்றும் ஒரூஉ தொடை அமைய வேண்டி இகச்சுட்டு பயின்று வந்துள்ளது. பெருமாளின் சிறப்பைக் கூறி எங்கள் ஆடையை தருமாறு பெண்கள் கண்ணனிடம் வேண்டுவதே பாடலின் மையக்கருவாக உள்ளது.

**உருபனும் அடையும்**

இகரம் என்ற சுட்டில் இ என்ற ஓர் உருபன் மட்டுமே உள்ளது. குறில் தனித்து அமைதல் என்ற வாய்பாட்டு அடிப்படையில் தனி அசையாக அமைந்து நேர் என்ற ஓரசை வாய்பாட்டில் அமையும் வாய்ப்பு கொண்டது.

**தனிச்சீர்**

இகரம் என்ற சுட்டு தனித்து ஓரசையாக நேரசை வாய்பாட்டில் அமைந்துள்ளது.

***கலிநிலைத்துறை: மா முன் நேர்-காய் முன் நிரை***

***ஏற்றேன் இப்பிறப்பே இடருற்றன னெம்பெருமான் (தி.பி.1035:2)***

***கொச்சகக் கலிப்பா:காய் முன் நேர்-காய் முன் நேர்***

***அளவியன்ற அந்தாதி யாயிரத்துள் இப்பத்தின் வளவுரையால் பெறலாகும் வானோங்கு பெருவளமே (தி.பி.2718:3, 4)***

மேற்கண்ட சான்றுகளில் கலிநிலைத்துறை என்ற யாப்பினத்தில் மா முன் நேர் என்ற நேரொன்றிய ஆசிரியத்தளை, காய் முன் நிரை என்ற கலித்தளையும் பயின்று வந்துள்ளது.

கொச்சகக் கலிப்பா என்ற யாப்பினத்தில் காய் முன் நேர் என்ற வெண்சீர் வெண்டளையும் காய் முன் நிரை என்ற கலித்தளையும் பயின்று வந்துள்ளது. இகரச் சுட்டானது சீரின் முதலயசையாக அமைந்து நேரசையாக தனி அசையாக அமைந்துள்ளது.

**பிணைச்சீர்**

**முன் பிணை + இகரச் சுட்டு**

இகரச் சுட்டின் முன்னர் தன்மை பன்மை வினைமுற்று, பெயரெச்சம் என்ற சொற்களை முன் பிணையாக கொண்டுள்ளது. இகரச் சுட்டானது முன் வரும் அசையோடு சேர்ந்து தனியசையாக நேரசையாகவும் வரும் அசையோடு சேர்ந்து நிரையசையாகவும் அமைந்துள்ளது.

**கலிவிருத்தம்**

**மின்னு நூல்விட்டு சித்தன் விரித்தஇப்**
**பன்னு பாடல்வல் லார்க்கில்லை பாவமே**
***(தி.பி.22: 3, 4)***

இச்செய்யுளில் இகரச் சுட்டு பெயரெச்சத்தோடு சேர்ந்து நிரையசை வாய்பாட்டில் அமைந்து முன் பிணையான பெயரெச்சத்தை ஏற்றுள்ளது.

**கலித்தாழிசை**

**தந்தொண்டை வாயால் தருக்கிப் பருகும்இச்**
**செந்தொண்டை வாய்வந்து காணீரே**
**சேயிழை யீர்வந்து காணீரே**
***(தி.பி.36:1, 2)***

இச்செய்யுளில் இகரச் சுட்டு தன்மை பன்மை வினைமுற்றை முன் பிணையாக கொண்டுள்ளது. வரும் அசையோடு சேர்ந்து தனியசையாக நேரசை வாய்பாட்டில் அமைந்துள்ளது.

**இகரச் சுட்டு + பின் பிணை**

இகரச் சுட்டு தன்னை முடிக்கும் சொல்லை மட்டும் பின் பிணையாக கொண்டுள்ளது.

**கலிநிலைத்துறை**

**நோற்றேன் பல்பிறவி நுன்னைக்காண்பதோ ராசையினால்**
**ஏற்றேன் இப்பிறப்பே இடருற்றன னெம்பெருமான்**
**கோற்றேன் பாய்ந்தொழுகும் குளிர்சே ாலைசூழ் வேங்கடவா**
**ஆற்றேன் வந்தடைந்தேன் அடியேனையாட் கொண்டருளே *(தி.பி.1035)***

இச்செய்யுளில் சீர்கள் ஒரு குறிப்பிட்ட வரன் முறையில் அமைந்துள்ளன.

| | *சீர் 1* | *சீர் 2* | *சீர் 3* | *சீர் 4* |
|---|---|---|---|---|
| *அடி 1* | *2* | *3* | *3* | *3* |
| *அடி 2* | *2* | *3* | *3* | *3* |
| *அடி 3* | *2* | *3* | *3* | *3* |
| *அடி 4* | *2* | *3* | *3* | *3* |

எனவே இரண்டாம் சீர்கள் அனைத்தும் மூவசை வாய்பாட்டில் அமைய வேண்டும் என்பதன் பொருட்டு இப்பிறப்பே என்ற சுட்டு பின் பிணை அமைந்துள்ளது. உன்னை காண்பதற்காகவே இப்பிறவினை ஏற்றேன் என்பது பாடலின் மையப்பொருளாக உள்ளது. மையமாக விளக்கும் பிறப்பு என்னும் சொல்லினைச் சுட்டி இகரச் சுட்டு அமைந்துள்ளது. மூன்றாம் சீரில் உள்ள ஐகாரம் அலகு பெறவில்லை. ஐகாரம் அலகு பெறின் நாலசை வாய்பாடாக மாறிவிடும். எனவே வாய்பாட்டு அடிப்படையிலே ஐகாரம் அலகு பெறுதல், பெறாமல் இருத்தல் என இரண்டும் திவ்வியப் பிரபந்தத்தில் வரும் பா, பாவினங்களுக்கு ஏற்ப உள்ளது.

**வகையுளி**

முன் வகையுளி + இகரச் சுட்டு

இகரச்சுட்டுதனக்குமுன்பாகபிறஅசையினை முன் வகையுளியாக கொண்டுள்ளது.

**கலிவிருத்தம்**

**அருள்கொண் டாடு மடியவ ரின்புற**
**அருளி னானவ் வருமறை யின்பொருள்**
**அருள்கொண் டாயிர மின்தமிழ் பாடினான்**
**அருள்கண் டீரிவ் வுலகினில் மிக்கதே**
***(தி.பி.944)***

இச்செய்யுளில் அனைத்து சீர்களும் ஈரசை வாய்பாட்டில் அமைந்துள்ளன. "கலிவிருத்தம்

நேரசையில் தொடங்கினால் பதினொரு எழுத்துக்களும், நிரையசையில் தொடங்கினால் பன்னிரண்டு எழுத்துக்களும் கொண்டு அமையும்' எனவீரபத்திர முதலியார்(ப.21.1984) இலக்கணம் வகுத்துள்ளார். இவ்விலக்கணத்தை ஒத்தே நிரையில் தொடங்கி ஒவ்வொரு அடியிலும் பன்னிரண்டு எழுத்துக்கள் உள்ளன. எல்லா அடியிலும் முதல் இரண்டு சீர்கள் மாச்சீராக அமைந்துள்ளது. ஆயின் மூன்றாம் அடியில் இரண்டாம் சீர் மட்டும் விளச் சீராக வந்துள்ளது. மூன்று மற்றும் நான்காம் சீர்கள் விளச் சீராக வந்துள்ளன. இரண்டாம் சீர்கள் மூன்றாம் அடியினை தவிர பிற அனைத்தும் மாச்சீராக வந்துள்ளன. எனவே மாச்சீராக அமையும் பொருட்டு டீரிவ் முன் வகையுளி கொண்டு இகரச் சுட்டு அமைந்து மாச்சீர் வாய்பாட்டினைநிறைவு செய்துள்ளன. திருவாய் மொழியே உலகில் சிறந்தது என்பது பாடலின் மையப்பொருளாக உள்ளது. எனவே உலகத்தை குறிக்கும் பொருட்டு இடத்தை வரையறை செய்யும்போது இகரச் சுட்டு அடைத் தொடராக அமைந்துள்ளது.

### பின் வகையுளி

இகரச் சுட்டு தன்னை முடிக்கும் சொல்லின் அசை மட்டுமே பின் வகையுளியாக பயின்று வந்துள்ளது.

***எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்***

***செந்நெ லரிசி சிறுப ருப்புச் செய்தஅக் காரம் நறுநெய் பாலால்***

***பன்னிரண் டுதிரு வோண மட்டேன் பண்டு மிப்பிள் ளைபரி சறிவன்***

***இன்னமு கப்பன்நா னென்று சொல்லி எல்லாம் விழுங்கிட்டுப் போந்து நின்றான்***

***உன்மகன் தன்னை அசோதை நங்காய் கூவிக் கொள்ளா யிவையும் சிலவே (தி.பி.208)***

இச்செய்யுளில் மூன்றாம் அடியில் மூன்று மற்றும் ஆறாம் சீரினை தவிர பிற அனைத்து சீர்களும் ஈரசை வாய்பாட்டில் அமைந்துள்ளன. எனவே இப்பிள்ளைபரிசறிவன் என்பவை ஆறு அசையினை கொண்ட சொற்களை இரண்டு சீர்களாக ஆக்கும் பொருட்டு வகையுளியாக அமைந்துள்ளது. மூன்று, நான்கு, எட்டாம் சீர்கள் மட்டும் மாச்சீராக உள்ளன.

### இகரச் சுட்டு நடுயசை

இகரச் சுட்டு தனக்கு முன்பாக பிற சொற்களைப் பிணையாக கொள்ளும்போது அவை நடுயசையாக அமையும் வாய்ப்பு கொண்டுள்ளது.

### கட்டளைக் கலித்துறை

***காண்கின் றனகளும் கேட்கின் றனகளும் காணில்இந்நாள்***

***பாண்குன்ற நாடர் பயில்கின் றனஇதெல் லாமறிந்தோம்***

***மாண்குன்ற மேந்திதண் மாமலை வேங்கடத் தும்பர்நம்பும்***

***சேண்குன்றம் சென்றுபொருள்படைப் பான்கற்ற திண்ணனவே***

***(தி.பி.2485)***

இச்செய்யுள் நேரசையில் தொடங்குவதால் கட்டளைக் கலித்துறையின் இலக்கணப்படி ஒவ்வொரு அடியிலும் பதினாறு எழுத்துக்கள் கொண்டு அமைந்துள்ளது. ஐந்தாம் சீரானது விளங்காயாக அமைய வேண்டும் ஆயின் தேமாதண்பூவிலும் அமையலாம் என்பது கட்டளைக் கலித்துறைக்குரிய இலக்கணமாக உள்ளது. எனவே விளங்காய் அல்லாதப் பொருட்டு தேமாதண்பூ அமைய வேண்டும் என்பதன் பொருட்டு காணில்இந்நாள் முன் பிணையோடு இகரச் சுட்டு நடுயசையாக அமைந்துள்ளது.

### தொடரும் அடையும்

இப்பிள்ளை, இச்செந்தொண்டை, இந்நம்பி, இப்பத்து, இப்பூமி, இவ்வுலகினில், இவ்வாயர், இக்கோபால பிள்ளைகள், இக்கடிப்பு, இந்நின்ற, இவ்விரா, இவ்வையத்தே, இவ்வூரில், இப்பழி, இப்பாடி, இவ்வீதி, இத்திசைக்கு, இத்திருமாலை,

இப்பிறவி, இப்பரிசு, இப்பேறு, இச்சிற்றிலை, இப்பொய்கை, இக்கன்னியரோமை, இக்காவில், இத்தெருவே, இவ்வரசும், இத்தரணி, இச்சுவை, இவ்வலைகடல், இப்பெண், இந்நம்பி, இந்நீர்மை, இக்காலம், இச்செழுக்கழலே, இப்பாயிருள், இத்தையல், இவ்வுடலை, இவ்வாணுதல், இவ்வேழை, இக்கட்டுவிச்சி, இந்நின்ற, இக்காற்று, இத்திருவருள், இப்பொருளை என்ற தொடர் மொழிகளாக வந்துள்ளன.

***கலித்தாழிசை***

***போரொரொக்கப் பண்ணிஇப் பூமிப் பொறைதீர்ப்பான் (தி.பி.102:1)***

***கலித்தாழிசை***

***பின்னிவ் வுலகினில் பேரிருள் நீங்கஅன் (தி.பி.106:3)***

***கலிவிருத்தம்***

***இன்றுமுற்றும் முதுகுநோவ இருந்திழைத்த இச் சிற்றிலை (தி.பி.515:1)***

என இகரச் சுட்டு அடைத் தொடர் பூமி, உலகு, சிற்றில் என்ற முடிக்கும் சொற்களை கொண்டுள்ளது.

***இகரச் சுட்டு அடையும் + அடைகளின் எண்ணக்கையும்***

***இகர சுட்டு பெயருடன் முடிந்து வரும்போது பிற அடையின்றி வரும். அடைகளோடும் வரும்.***

***கட்டளைக் கலித்துறை***

***தேர்வன தெய்வமன் னீரகண் ணோவிச் செழுங்கயலே (தி.பி.2491:4)***

***வஞ்சி விருத்தம்***

***வாடி வாடுமிவ் வாணுதலே (தி.பி.2818:4)***

***கட்டளைக் கலித்துறை***

***நினையார் பிறவியை நீக்கும் பிரானைஇந் நீணிலத்தே (இரா.நூ.அ.90:1)***

இக்கயலே என்னும் சொற்களுக்கு இடையில் செழு என்னும் அடை பயின்று வந்துள்ளது. இந்நுதல் என்ற சொற்களுக்கு இடையில் வாண் என்னும் அடை பயின்று வந்துள்ளது. இந்நிலம் என்ற சொற்களுக்கு இடையில் நீள் என்ற அடை பயின்று வந்துள்ளது. ஓரடைகளாக பயின்று வந்துள்ளது. சீர் நீட்சி, வருணனை அடிப்படையில் அடைகள் பயின்று வந்துள்ளன.

**பொருண்மையும் அடையும்**

பிள்ளை, செந்தொண்டை, நம்பி, பத்து, பூமி, உலகினில், ஆயர், கோபால பிள்ளைகள், கடிப்பு, நின்ற, இரா, வையத்தே, ஊர், பழி, பாடி, வீதி, திசைக்கு, திருமாலை, பிறவி, பரிசு, பேறு, சிற்றிலை, பொய்கை, கன்னியரோமை, காவில், தெருவே, அரசும், தரணி, சுவை, அலைகடல், பெண், நம்பி, நீர்மை, காலம், செழுக்கழலே, பாயிருள், தையல், உடலை, வாணுதல், ஏழை, கட்டுவிச்சி, நின்ற, காற்று, திருவருள், பொருளை என்னும் சொற்கள் சுட்டு அடைத் தொடர் பொருண்மையில் வந்துள்ளன. இனப்பெயர், பெயர், உறுப்பு, பூதங்கள் என பல வகையான பொருண்மைகளின் அடிப்படையில் இகரச் சுட்டு அடைத் தொடர் அமைந்துள்ளது.

**முடிவுரை**

இகரச்சுட்டுபெயரெச்சத்தைஅடிப்படையாக கொண்டு மட்டுமே தொடரானது அமைந்துள்ளது. பெயரெச்சம், எதிர்மறை, பெயரெச்சச் சுட்டு அடை பெயர் என்ற வரிசைமுறையில் மட்டுமே இகரச்சுட்டுஅடைத்தொடரானதுஅமைந்துள்ளது. வினையினை அடிப்படையாக கொண்டு பல தொடர்கள் உருவாக்கப்படுகிறது. யாப்பு சூழலுக்கு ஏற்ப பல வகையான அடைத் தொடர்கள்பயன்படுத்தப்படுகிறது. இகரச்சுட்டு அடைத்தொடர் செய்த, செய்யும் என்ற பெயரெச்ச வாய்பாட்டினை முடிக்கும் சொல்லாக பயின்று வந்துள்ளது. பெயர், இடம், பொருள், காலம், உறுப்பு போன்ற சொற்களை அடிப்படையாக கொண்டு இகரச்சுட்டு அமைந்துள்ளது. யாப்பு வடிவம், பொருண்மை இரண்டினை அடிப்படையாக கொண்டு திவ்வியப் பிரபந்தத்தில் பயின்றுள்ளது. எதுகை, மோனை, சீர் நிரப்பி, அசை நிரப்பியாக இகரச் சுட்டு அடைத்தொடர் பயின்று வந்துள்ளது.

**துணை நூற்பட்டியல்**

1. அகத்தியலிங்கம், ச., தமிழ்மொழி அமைப்பியல், மெய்யப்பன் தமிழாய்வகம், 53, புதுத்தெரு, சிதம்பரம். முதல் பதிப்பு: அக்டோபர் - 2016.
2. அரங்கராசன் மருதூர், யாப்பறிந்து பாப்புனைய, ஐந்திணைப் பதிப்பகம், 279, பாரதி சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. இரண்டாம் பதிப்பு: டிசம்பர் - 2018.
3. அரங்கன், கி., தொடரியல்: மாற்றிலக்கண அணுகுமுறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். மறுஅச்சு - 2014.
4. சண்முகம், செ.வை., இலக்கியமும் மொழிஅமைப்பும், 41-ஆ, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை. இரண்டாவது திருந்திய பதிப்பு: ஏப்ரல் - 2012.
5. செயராமன், ரா., தொடர்மொழி இலக்கண அடிப்படைகள், தமிழாய்வு மன்றம், 41083, நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை, கொட்டிவாக்கம், சென்னை. பதிப்பு ஆண்டு - 2013.
6. வீரபத்திர முதலியார், தி., விருத்தப்பாவியல், ஈ.என். தணிகாசு முதலியார் பதிப்பாசிரியர், கழகம், சென்னை. முதற் பதிப்பு - 1984.
7. லிப்கோ பதிப்பு, நாலாயிர திவ்வியப் பிரபந்தம், லிப்கோ பப்ளிஷர் (பி) லின், புதிய எண்.36, வடக்கு சாலை, மேற்கு சி.ஐ.டி.நகர், சென்னை. மறு அச்சு - 2016.